**ஊவா பரணகம பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2014 ஜுன் 27 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 ஜுன் 06 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்டம்பர் 26 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்பட்ட தாக்கங்களைத் தவிர, நிதிசார் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டிருந்தன என்றும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊவா பரணகம பிரதேச சபையின் நடவடிக்கைகளது நிலைமை மற்றும் முடிவுற்ற அவ்வாண்டிற்கான அதன் செயற்பாட்டினது நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினது உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலையைக் காட்டுகின்றன என்பதும் எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

சபையால் மீளாய்வாண்டிற்கெனத் தயாரிக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கமையத் தயாரிக்கப்படவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு விலைப்பட்டியலைச் சமர்ப்பிக்காதிருந்த 19 தொழில்கள் தொடர்பாக நிதியேற்பாடு மேற்கொள்ளப்படாமையால், ஆண்டிற்கான செலவினமும் கடன் கொடுத்தோரும் முறையே ரூபா 400,000 வீதம் அதிகரித்து நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

#### 1.3.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களில் காணப்படும் திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்பு மீதிகளை ஐந்தொகை மற்றும் துணைப் பதிவேடுகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 177,230 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

#### 1.3.4 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பெற வேண்டிய கணக்கு மீதிகளது பெறுமதி ரூபா 35,233,894 ஆகும். கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்கு மீதிகளது பெறுமதி ரூபா 16,962,949 ஆகும்.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றின்மை**

பெறுமதியுடன் கூடிய பட்டோலை மற்றும் பேரேட்டுக் கணக்குகளை ரூபா 25,680,163 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்களின் பொருட்டுச் சமர்ப்பிக்காமையால், அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 19(1) 1 ஆம் பிரிவு | ஒப்பந்த அடிப்படையில் 11 ஊழியர்களை ஆட்சேர்க்கும்போது உள்ளுராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தைப் பெற வில்லை. |
| (ஆ) 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கம் மற்றும் 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் 23 "அ"பிரிவு | அதிகாரச் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தைப் பெற வேண்டிய சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் இயங்கும் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்படாதிருந்தது. மேலும், சுற்றாடல் அனுமதிப்பதிரத்தை வழங்குவதற்காக 2013 ஆம் ஆண்டிற்கான சபையின் வர்த்தக அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருந்த 35 மிளகாய் முதலியவற்றை அரைக்கும் நிலையங்களதும் 10 தளபாடத் தொழிற்சாலைகளதும் நடவடிக்கைகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| நிதிப் பிரமாணம் 871 | சபையானது 1991-2011 காலப்பகுதியின் போது 09 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த ரூபா 296,757 முற்பணமானது 2013 டிசெம்பர் 31 மாதமளவிலும் தீர்த்து வைக்கப்படாதிருந்தது. |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 13,219,576 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 6,300,965 ஆகும். இதன் காரணமாக, நிதிசார் விளைவுகளில் ரூபா 6,918,611 சாதகமான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு**

நிதிசார் விளைவுகளின் நிகர அதிகரிப்பு தொடர்பான பகுப்பாய்வுடனான மீளாய்வு கீழே காணப்படுகின்றது.

| மீண்டுவரும் வருவாய் | 2013 | 2012 | வேறுபாடு | |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| தீர்வையும் வரியும் | 1,999,131 | 1,808,775 | 190,356 | |
| வாடகை | 1,101,829 | 1,079,037 | 22,792 | |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 627,811 | 650,810 | (22,999) | |
| சேவைக் கட்டணம் | 5,484,549 | 9,182,819 | (3,698,270) | |
| பிடி ஆணைக் கட்டணமும் தண்டப் பணமும் | 1,534,486 | 1,517,948 | 16,538 | |
| ஏனைய வருவாய் | 9,525,223 | 636,926 | 8,888,297 | |
| வருவாய்க்கான உதவி | 11,637,238 | 9,039,679 | 2,597,559 | |
| | | | | 7,994,273 |
| **மீண்டுவருஞ் செலவினம்** | | | | |
| சம்பளமும் படியும் | 13,293,467 | 11,383,550 | (1,909,917) | |
| பயணச் செலவினம் | 539,850 | 509,318 | (30,532) | |
| வழங்கலும் சேவைகளும் | 1,419,299 | 1,087,341 | (331,958) | |
| மூலதனச் சொத்துப் பழுதுபார்ப்பும் பராமரிப்பும் | 695,574 | 1,874,509 | 1,178,935 | |
| போக்குவரத்து மற்றும் ஏனைய சேவைகள் | 2,457,776 | 2,523,840 | 66,064 | |
| உதவித் தொகை, உதவு தொகை மற்றும் நிவாரணப் பணம் | 101,490 | 33,245 | (68,245) | |
| ஓய்வூதிய நலன் மற்றும் பணிக்கொடை | 183,236 | 203,227 | (19,991) | |
| | | | | (1,075,662) |
| சாதகமான வேறுபாடு | | | | 6,918,611 |

**2.3 வருவாய் நிர்வாகம்**

**2.3.1 குத்தகை வாடகை**

(அ) 2013 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் சபைக்குரிய சில கடைகளின் 13 மாதங்கள் தொடக்கம் 58 மாதங்கள் வரையிலான வாடகை நிலுவை ரூபா 164,299 ஆகவிருந்தது. அவ்வாடகை நிலுவை அறவிடப்படாதிருந்தது.

(ஆ) 1990 - 1996 காலப் பகுதிக்கான வாடகை நிலுவையை 8 கடைகளிலிருந்து அறவிடுவதற்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அவ்வழக்குகளின் தீர்ப்புக்கமைய நிலுவையை அறவிடவில்லை. 2013 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் அக்கடைகளது வாடகை நிலுவை ரூபா 108,616 ஆகவிருந்தது.

### 2.3.2 அனுமதிப்பத்திரக் கட்டணம்

2013 ஆம் ஆண்டிற்கான வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணத்தைச் செலுத்த வேண்டிய வியாபார நிறுவனங்களை முறையான கணிப்பின் மூலம் இனங் காண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3.3 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபைத் தலைமைச் செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும் பின்வருமாறு.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம் | 3,653,693 |
| முத்திரைக் கட்டணம் | 1,740,208 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 டிசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்கச் சுற்றறிக்கைப் பிரகாரம் குறைந்தது 5 ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது பிரதான விலை மதிப்பீட்டாளர் அல்லது உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான மதிப்பீட்டாளர் ஒருவரால் கடைகளது மாதாந்த குத்தகை வாடகை மதிப்பிடப்பட வேண்டும். எனினும், சபைக்குரிய 79 கடைகள் சம்பந்தமாக அவ்வாறான மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை.

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் தொலைத் தொடர்புக் கோபுரங்களை நடாத்துவதற்கான உப விதிகளை ஏற்படுத்தி கட்டணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. 2013 ஆம் ஆண்டளவில் சபையின் அதிகாரத்துக்குட்பட்ட 4 இடங்களில் தொலைத் தொடர்பு கோபுரங்கள் பொருத்தப்பட்டிருந்தன.

(ஆ) பிணை வைப்பாக சபையின் 13 ஊழியர்களால் வைப்பிலிடப்பட்ட ரூபா 84,900 ஊழியர்கள் ஒவ்வொருவரினதும் பெயரில் வங்கியில் முதலீடு செய்யப்படாதிருந்தது.

### 3.3 பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

(அ) 1993 ஆம் ஆண்டில் இராணுவக் கடமைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்ட 53-5074 இலக்க டபிள் கெப் வாகனம் 2014 ஜூன் மாதமளவிலும் சபைக்கு திருப்பி வழங்கப்படாதிருந்தது.

(ஆ) EMDI - 120 ஆம்இலக்க பாம் மாஸ்டர் கை டிறக்டரைக் கைதவிர்ப்புச் செவதற்கோ அல்லது பயன்படுத்தவோ நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(இ) சர்வதேச உணவு மற்றும் கமத்தொழில் ஸ்தாபனத்தால் உலர் வலய சீவனோபாய உதவிக்கான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 200 குடும்பங்களுக்கு நலன் வழங்கும் நோக்குடன் ரூபா 1,107,927 பயன்படுத்தப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட கட்டிடமானது 2012 ஒக்டோபர் 31 அன்று திறந்து வைக்கப்பட்டபோதும், பயன்படுத்தப்படாதிருந்தது.

**4. கணக்களி தகைமையும் நல்லாளுகையும்**

**வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு**

சபையால் மீளாய்வாண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தின் வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட வருவாய், செலவினம் என்பவற்றிற்கும் உள்ளவாறான வருவாய், செலவினம் என்பவற்றிற்குமிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் நிலவியதால் வரவு, செலவுத் திட்டமானது ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

| **மீண்டுவரும் வருவாய்** | **வரவு, செலவுத்திட்டமிடப்பட்டது** | **உள்ளவாறானது** | **வேறுபாடு** | **வேறுபாட்டுச் சதவீதம்** |
|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | |
| தீர்வையும் வரியும் | 1,521,540 | 1,999,131 | 477,591 | 31 |
| அனுமதிப் பத்திரம் | 823,500 | 627,812 | 195,688 | 24 |
| சேவைக் கட்டணம் | 3,160,000 | 5,484,549 | 2,324,549 | 73 |
| ஏனைய வருவாய் | 723,000 | 9,525,223 | 8,802,223 | 1,217 |
| வருவாய்க்கான உதவி | 10,022,196 | 11,637,238 | 1,615,042 | 16 |
| **மீண்டுவருஞ் செலவினம்** | | | | |
| சம்பளமும் படியும் | 11,381,456 | 13,293,467 | 1,912,011 | 16 |
| வழங்கலும் உபகரணங்களும் | 1,085,000 | 1,419,299 | 334,299 | 31 |
| மூலதனச் சொத்துப் பழுதுபார்ப்பும் பராமரிப்பும் | 970,000 | 695,574 | 274,426 | 28 |
| போக்குவரத்தும் பாவனைச் சேவைகளும் | 2,890,000 | 2,457,776 | 432,224 | 15 |
| உதவிப் பணம், உதவு தொகை மற்றும் நிவாரணப் பணம் | 254,000 | 101,490 | 152,210 | 60 |
| ஓய்வூதியம், ஓய்வூதிய நலன் மற்றும் பணிக் கொடை | 230,015 | 183,236 | 46,779 | 20 |

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) சொத்து முகாமைத்துவம்

(ஆ) வருவாய் நிர்வாகம்